# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதிவிசேஷமானது

අංක 2222/29 – 2021 අප්‍රේල් මස 06 වැනි අඟහරුවාදා – 2021.04.06

**2222/29 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரக்கோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் , J/ 88, புதிய சோனகத் தெரு கிராம அலுவலர் பிரிவில், வண்ணார்பண்ணை மேற்கு (வட்டார இல. 21 யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்டது.) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.12.14 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இல. YA/JFF/2018/229 இல் துண்டு ‘A’ எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0343 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு ‘A’ - குருதுபிடுங்கி வயல், வரிமதிப்பீட்டு இல. 12 A - விஸ்தீரணம் : 0.0343 ஹெக்டயார்**

வடக்கு : குளம் மற்றும் குருதுபிடுங்கி வயல், கனகசபை சண்முகசுந்தரம் உரிமை கோரும் காணி ; கிழக்கு : குருதுபிடுங்கி வயல், கனகசபை சண்முகசுந்தரம் மற்றும் பி. யேசுராஜன் உரிமை கோரும் காணி ; தெற்கு : குருதுபிடுங்கி வயல், பி. யேசுராஜன் உரிமை கோரும் காணி மற்றும் அராலி வீதி; மேற்கு : அராலி வீதி மற்றும் குளம்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சின் குறிப்பு இல. : 4-3/9/2018/WS/216.
பிரதேச செயலகத்தின் குறிப்பு இல. : J/DS/2/9/4/03-2018.
காணி அமைச்சு, “மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 16.

04-571

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரக்கோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில், 51E, கொலஹெல கிராம அலுவலர் பிரிவில், கொலஹெல, பிரிவு இல. 9, கேகாலை நகர சபை நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2019.12.16 ஆந் திகதி தயாரிக் கப்பட்ட சுவட்டு வரைபட இல. KE/KGL/2019/111 இல் குறிப் பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - வலவ்வத்தை - விஸ்தீரணம் : 0.1012 ஹெக்டயார்**

வடக்கு : கே. 31 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 மற்றும் கே. 839 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 4 ; கிழக்கு : கே. 839 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 4 மற்றும் இவ்வரைபடத்தில் துண்டு B ; தெற்கு : துண்டு B மற்றும் கே. 839 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 4 ; மேற்கு: கே. 839 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 4 மற்றும் 7850 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 76.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/12/2018/F/343
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 16.

04-572

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.